மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

(ஆ) வேலூரிலுள்ள ஒரு பிள்ளையார் சிலையை சிலர் அகற்றியிருப்பதால் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து.

முற்பகல் 10-30 மணி

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரில் தோட்டப் பாளையம் என்ற பகுதியில், சென்னை-வேலூர் மெயின் ரோட்டில் 8 மாதங்களுக்கு முன்னாலே வேலூர் நகர மக்களும் ஆன்மீகத் துறையில் ஆர்வம் உள்ளவர்களும், அங்கிருக்கும் அரசமரத்தடியில் ஒரு பிள்ளையார் சிலையைப் பிரதிஷ்டை செய்து, தொடர்ந்து பூஜை செய்தும் வந்தார்கள். புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சி நடக்கிற இந்த வேளையில் 12-9-1991-ம் தேதி, பிள்ளையார் சதுர்த்தி நெருங்கிவருகிற வேளையில் 10-ந் தேதி அது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதாகச் சொல்லி, ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த ஆர். ஐ. ** போன்றவர்கள் ஒன்றுகூடி 10-ந் தேதி காலை ஒன்பதரை மணிக்கு அந்தக் கோயிலை இடித்து சிலையை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் அப்புறப்படுத்திய செயல் வேலூர் நகர மக்களை அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கி இருக்கிறது. அந்தக் கொந்தளிப்பின் விளைவாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய அலுவலகத்திற்கு காரில் சென்றபோது கொதிப்படைந்திருந்த மக்கள் அந்தக் காரை குறுக்கே மறித்து ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தின் நந்தா விளக்காய் விளங்கிக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலய புனரமைப்பு திட்டத்தை வகுத்து நல்ல உள்ளத்தோடு நிதியைத் திரட்டிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்பே ஒரு அதிகாரியின் பெயரைச் சொல்லி நீங்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். இதுமாதிரி விஷயங்களில் என்னிடத்தில் அனுமதிபெற்று ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் சொல்லும் போதுதான் அந்தப் பெயர்களைப் பயன்படுத்தலாம். இப்போது நீங்கள் குறிப்பிட்ட அந்த ஆர். ஐ. பெயரை நீக்க உத்தரவிடுகிறேன். எப்போதும் அதிகாரிகளுடைய பெயரைச் சொல்வது மரபல்ல.

திரு. சி. ஞானசேகரன் : ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு சம்பந்தப்பட்ட ஆர். ஐ. ஒருவர் சில நபர்களை வைத்துக் கொண்டு விநாயகர் கோயிலை இடித்து சிலையை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலயத் திருப்பணிக்காக இப்போது நிதியை நல்ல உள்ளத்தோடு சேர்த்துக்கொண்டிருக்கிற இந்த வேளையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1991 செப்டம்பர் 13] [திரு. சி.ஞானசேகரன்]

ஒரு ஆலயத்தை இடித்து அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்தவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு சில அதிகாரிகள் முயன்று வருகிறார்கள். இப்போது வேலூர் நகரத்து மக்கள் அந்தப் பிள்ளையார் சிலை அந்த இடத்தில் இல்லாத காரணத்தால் மிகவும் அல்லலுற்று, அதுவும் பிள்ளையார் சதுர்த்தி நெருங்கி வருகிற வேளையில் சிலையை அப்புறப்படுத்தியது வேதனைபடக் கூடிய ஒன்றாக இருக்கிறது. மனிதனுக்குத்தான் கஷ்டம் வரும், ஆனால் கடவுளுக்கும் அதுபோன்ற கஷ்டம் வந்தது மிகவும் வேதனையாக இருக்கிறது. பிள்ளையாரையும் அந்த விதி விட்டுவைக்கவில்லை போலும். ஆகவே வேலூர் நகர மக்களுடைய குறைகளை நீக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து பிள்ளையாரை அவருடைய இருப்பிடத்திற்கே அனுப்பிவைக்கக் கேட்டு, உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளையும் பணிவோடு முதலமைச்சர் அவர்களுக்கு வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட அந்த பிள்ளையாருக்கு ஏற்கனவே சிறப்பான வழிபாடு நடத்தி அவர் நிரந்தரமாகத் தங்கியிருக்க ஒரு இடமும் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் வேலூரில் தோட்டப் பாளையம்-ஆற்காடு ரோடு-சி. எம். சி. மருத்துவமனை அருகில் நெடுஞ்சாலை ரோட்டில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த காரணத்தினால் அந்த இடத்திலிருந்து நெடுஞ்சாலைத் துறையினர் 10–9–1991 அன்று அந்தப் பிள்ளையார் சிலையைப் பெயர்த்து அதன் அருகில் உள்ள பள்ளி மைதானத்தில் சுமார் 300 சதுர அடி இடத்தை ஒதுக்கிக் கொடுத்துள்ளனர். நேற்று இடம் பெயர்ந்த அந்தப் பிள்ளையாருக்கு சிறப்பாக விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சுமார் 7 மாதங்களுக்கு முன்பு 1 அடி பிள்ளையார் சிலையை இந்த நெடுஞ்சாலையில் சிறுகடை வைத்திருப்பவர்கள் நிறுவியிருந்தார்கள். கோயில் எதுவும் கட்டப்படவில்லை. கட்டப்படாததால் இடிக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. இந்தப் பிள்ளையார் சிலையை அகற்றியதால் ஏற்பட்ட அதிருப்தி, அந்தப் பிள்ளையார் சிலைக்கு தனி இடம் ஒதுக்கப்பட்டு உள்ளதால், மறைந்து அனைவருக்கும் திருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அதன்

தொடர்பாக நேற்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேற்று வேலூரிலிருந்து வெளியிடப்பட்ட 'தினமலர்' பத்திரிகையில், ''பிள்ளையார் வீடு மாறுகிறார்'' என்ற செய்தியைத் தலைப் போடு கொடுத்து, வேலூரில் திடீர் பதற்றம் கலெக்டர் முடிவால் தணிந்தது என்று முடித்திருக்கிறார்கள். எனவே சிலை அகற்றப்பட்டதால் ஏற்பட்ட சிறு அதிருப்தி, இப்போது 300 சதுர அடி இடத்தை ஒதுக்கிக் கொடுத்து ஒரு நிரந்தர மான நல்ல இடத்தை ஏற்படுத்திக் கொடுத்ததால் இப்போது பிள்ளையார் பத்திரமாக இருக்கிறார் என்பதால் மக்களுக்கும் அதிருப்தி இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

முற்பகல் 10-35 மணி.

இ) குன்னூர்ப் பகுதியில் புலியினால் மக்களுக்கு ஏற்படும் அபாயம் பற்றி உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கருப்புசாமி என்னுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்திருந்தார். இப்போது இரண்டு கால் புலிகளைப் பற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் விளக்கியிருந்தார்கள். உறுப்பினருடைய தொகுதியில் உண்மையான 4 கால் புலி ஒன்று அட்டகாசம் செய்வதாகவும் அதைச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்றும், அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டார். நேற்றைய தினமே அந்தப் புலி சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. எனவே மேற்கொண்டு இந்தப் பிரச்சினை வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே போல் மூன்று மாதங்களுக்கு முன்பும் குன்னூர் தொகுதியில் ஒரு புலி பிடிக்கப்பட்டது. இப்போது இரண்டாவது புலி பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புலி இப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டது. (பலத்த சிரிப்பு) மீண்டும் அவருடைய உத்தரவின் பேரில் இந்தப் புலி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டது. மீண்டும் இதே போன்று புலிகளின் அட்டகாசங்கள் அந்த நீலமலைப் பகுதியில் ஏற் படாமல் இருக்க நிரந்தரமான நடவடிக்கையாக ஒரு சிறு யோசனையைக் கூறிக்கொள்கிறேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு கர்நாடகா மாநிலத்தில் Environmental Study என் பதற்காக காட்டு விலங்குகளின் எண்ணிக்கை என்னவென்று கணக்கிடும் போது, விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட கழுத்துப்பட்டைகளை விலங்குகளின் கழுத்தில் அணிவித்து